[1979 மார்ச் 14

7. அறிவிப்ப

ஆளுநர் இசைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் இசைவு தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(இ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டுமென்று கோருகிறேன்.

இந்தச் சட்டத்தை நான் முன்மொழியும்போது, சில கருத்துக் களையும் சொல்ல விரும்புகிறேன். நகர்ப்புறத்தில் இருக்கிற நிலங்களுக்கு உச்சவரம்பு சட்டம் கொண்டு வருகிறபோது சில விதிவிலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன். தர்ம ஸ்தாபனம், மத ஸ்தாபனம் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு எல்லாம் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கு அளிக்க பட்டிக்கிறபோது அந்தச் சட்டத்தின்படி அவர்கள் அந்த நிலங் களை குறிப்பிட்ட ஸ்தாபனங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள லாம். பயன்படுத்திக் கொள்ளும் காலம் போக, அதுபற்றி அரசுக்குத் தெரிவித்து விட்டு 120 நாட்களுக்குப் பிறகு அதை அவர்கள் அரசுக்கு வேண்டுமானால் கொடுக்கலாம். அரசு வாங்க மறுத்துவிட்டால் வேறு யாருக்காவது விற்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அப்படி உரிமை இருக்கிறபோது, இன்றைக்கு நகரில் இருக்கிற நிலங்களுக்கு விலை அதிகமாக இருக்கிறது. இந்தச் சட்டத்தில் எப்படி கொண்டுவந்திருக்கிறோம் என்றால் அப்படி அளிக்கப்பட்ட விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட அந்த ஸ்தாபனங்களுக்கு தேவையான காலம்

---

* 1979, பிப்ரவரி 19 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.